### பிளஸ் டூ பொதுத் தேர்வில், மாணவ, மாணவிகள்

# பாடவாரியாகப் பெற்ற மதிப்பெண்களின் சதவீதம்!

### பள்ளிக்கல்வித்துறை வெளியிட்டுள்ளது!

சென்னை, மே. 9-

பள்ளிக்கல்வித்துறை வெளியிட்டுள்ள தேர்வு முடிவுகளில், முதன்மைப் பாடங்களான இயற்பியல் பிரிவில் 98 புள்ளி எட்டு ஏழு சதவீதத்தினரும், வேதியியல் பிரிவில் 98 புள்ளி எட்டு இரண்டு சதவீத மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், உயிரியல் மற்றும் கணிதம் பாடத்தில் தலா சுமார் 99 சதவீதம் பேர் தேர்ச்சி அடைந்துள்ளனர்.

தாவரவியல், விலங்கியல் மற்றும் கணக்குப் பதிவியலில் சுமார் தலா 98 சதவீதத்தினரும், கணினி அறிவியலில் 99 புள்ளி எட்டு நான்கு சதவீதத்தினரும் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதேபோல் வணிகவியல் மற்றும் வரலாறு பாடத்தில் சுமார் தலா 97 சதவீதம் பேர் தேர்ச்சி அடைந்துள்ளதாக பள்ளிக்கல்வித்துறை தெரிவித்துள்ளது.

பாடப்பிரிவுகள் வாரியான தேர்ச்சி விகிதத்தில், அறிவியலில் 96 புள்ளி ஒன்பது பூஜ்ஜியம் சதவீதத்தினரும், வணிகவியலில் 92 புள்ளி ஆறு ஏழு சதவீதம் பேரும், கலைப் பிரிவில் 85 புள்ளி ஒன்று ஒன்பது சதவீதம் பேரும், தொழிற்பாடத்தில் 85 புள்ளி ஒன்பது ஏழு சதவீதம் பேரும் தேர்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அமெரிக்கா செல்லும் இந்திய நிறுவனங்களின் முதலீடு

# 20.5 பில்லியன் டாலர்களுக்கு ஒப்பந்தம்!

புதுடெல்லி, மே.9-

அமெரிக்காவில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக நடத்தப்படும் 'செலக்ட் யுஎஸ்ஏ' (Select USA) மாநாட்டில், இந்திய நிறுவனங்கள் முன் எப்போதும் இல்லாத வகையில் மிகப்பெரிய முதலீட்டுத் திட்டங்களை அறிவித்துள்ளன.

இதில் குறிப்பாக மருந்துத் துறை நிறுவனங்கள் அமெரிக்காவில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டியுள்ளன.

அதாவது மொத்த முதலீட்டில் சுமார் 19.1 பில்லியன் டாலர்கள் மருந்துத் துறையில் மட்டுமே மேற்கொள்ளப்பட உள்ளது.

இதில் மிக முக்கியமாக, சன் பார்மா சூட்டிகல்ஸ் நிறுவனம் நியூ ஜெர்சியைச் சேர்ந்த 'ஆர்கனான் & கோ' நிறுவனத்தை 11.75 பில்லியன் டாலருக்கு வாங்கியுள்ளது. அரவிந்தோ பார்மா, பயோகான், சிப்லா, டாக்டர் ரெட்டிஸ் லேபரேட்டரிஸ், லூபின், ஜைடஸ் லைஃப் சயின்சஸ் உள்ளிட்ட முன்னணி நிறுவனங்கள் இந்த முதலீட்டுத் திட்டத்தில் இணைந்துள்ளன.

ஜே.எஸ்.டபிள்யூ ஸ்டீல் (JSW Steel) நிறுவனம் ஓஹியோ மற்றும் டெக்சாஸ் மாகாணங்களில் உள்ள தனது ஆலைகளை நவீனப்படுத்த 225 மில்லியன் டாலர் முதலீடு செய்யவுள்ளது.

அகமதாபாத்தைச் சேர்ந்த அபித்யாய் குழுமம் அய்ந்து அமெரிக்க நகரங்களில் 900 மில்லியன் டாலர் முதலீடு செய்து, 1,500 அமெரிக்கர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

அய்அய்டி மெட்ராஸ் உலகளாவிய ஆராய்ச்சி அறக்கட்டளை, கலிபோர்னியாவில் ஆராய்ச்சி மய்யம் அமைக்க 4.5 மில்லியன் டாலர் முதலீடு செய்யவுள்ளது. 2030 ஆம் ஆண்டிற்குள் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை 500 பில்லியன் டாலராக அதிகரிக்க இந்தியாவுடன் அமெரிக்கா ஒப்பந்தம் மேற்கொண்டதன் பின்னணியில் இந்த முதலீடுகள் நடத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவுடனான இந்தியாவின் வர்த்தக உபரி (Trade Surplus) சுமார் 41 பில்லியன் டாலராக உள்ளது.

இதைச் சமன் செய்ய இந்திய நிறுவனங்கள் அமெரிக்காவிலிருந்து அதிக இறக்குமதி செய்ய வேண்டும் என்றும், அங்கு முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் என்றும் டிரம்ப் நிர்வாகம் அழுத்தம் கொடுத்து வருகிறது.

அமெரிக்க உச்சநீதிமன்றம் டிரம்ப்பின் சில வரி விதிப்பு அதிகாரங்களை ரத்து செய்துள்ளதால், இரு நாடுகளுக்கும் இடையிலான இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் தற்போது இழுபறியில் உள்ளது.

2026 ஜூலை மாதத்திற்குள் அமெரிக்கா தனது புதிய வரி விதிப்பு முறையை அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் பின்னரே இந்த வர்த்தக ஒப்பந்தத்தின் இறுதி வடிவம் உறுதி செய்யப்படும் என கூறப்படுகிறது.

# 'ஹார்முஸ்' ஜலசந்தி முடக்கத்தை கைவிட முடிவு!

### அமெரிக்கா — ஈரான் சம்மதம்!

நியூயார்க், மே 8

ஹார்முஸ் ஜலசந்தி முடக்கத்தை கைவிட, அமெரிக்காவும், ஈரானும் பச்சைக்கொடி காட்டியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மேற்காசிய நாடான ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கடந்த போரைத் பிப்., 28ல் தொடங்கின.

இந்த மோதலுக்குப் பின், ஈரான் ஹார்முஸ் ஜலசந்தியை மூடியதும், பதிலுக்கு ஈரான் துறை முகங்களை அமெரிக்கா முற்றுகையிட்டதும் உலகப் பொருளாதாரத்தையே ஆட்டிப்படைத்தது.

கச்சா எண்ணெய் விலை தாறுமாறாக உயர்ந்த நிலையில், தற்காலிக போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது. போரை நிரந்தரமாக நிறுத்துவது மற்றும் பிற பிரச்னைகள் தொடர்பாக இரு தரப்பும் பேசி வருகின்றன. இரு தரப்பும்பல நிபந்தனை களை மாறி மாறி விதித்து வருவதால், ஹார்முஸ் ஜலசந்தியை திறப்பதில் முட்டுக்கட்டை ஏற்பட்டது.

தற்போது இந்த விவகாரத்தில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையே ஒரு சுமுக உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, ஹார்முஸ் ஜலசந்தி வழியாக வணிகக் கப்பல்கள் செல்ல ஈரான்

அனுமதிக்கும். பதிலுக்கு ஈரான் துறை முகங்கள் மீது அமெரிக்கா விதித்துள்ள கடற்படை முற்றுகை படிப்படியாக விலக்கிக் கொள்ளப்படும்.

இதன் தொடர்ச்சியாக, அடுத்த 30 நாட்களுக்குள் நிரந்தரத் தீர்வு காண இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

இதனால், ஹார்முஸ் ஜலசந்தியில் மாதக்கணக் சரக்காக சிக்கித் தவிக்கும் நூற்றுக்கணக்கான குக்கப்பல்கள் விடுவிக்கப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலக கச்சா எண்ணெய் தேவையில் பெரும் பகுதியை நிறைவு செய்யும் இந்த ஜலசந்தி மீண்டும் திறக்கப்படுவது, இந்தியா உள்ளிட்ட இறக்கு மதி நாடுகளுக்கு பெரும் ஆறுதலை தந்துள்ளன. எனினும் ஈரானும், அமெரிக்காவும் பேச்சிலும், செயல்பாட்டிலும் நிலைப்பாடில் ஒரே இல்லை என்பதால் இந்த முடிவும் தற்காலிகமானதே என பொருளாதார நிபுணர் கள் எச்சரித்துள்ளனர்.

### போரை முடிவுக்குக் கொண்டுவரும் 14 அம்ச ஒப்பந்தத்தில்

# அமெரிக்கா - ஈரான் விரைவில் கையெழுத்திட வாய்ப்பு உருவாகியுள்ளது!

வாஷிங்டன், மே 9-

போரை முடிவுக்கு கொண்டு வரும் 14 அம்ச ஒப்பந்தத்தில், அமெரிக்கா மற்றும் ஈரான் விரைவில் கையெழுத்திடுவதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்காசிய நாடான ஈரான் மீதான போர் இரண்டு மாதங்களைக் கடந்துள்ளது. தற்போது தற்காலிக போர் நிறுத்தம் அமலில் உள்ளது. இரு தரப்பிடையே மோதலை கைவிடுவது குறித்து பேச்சுகள் நடந்து வருகின்றன.

இதையடுத்து, அமெரிக்க அமைதி பேச்சு குழுவை சேர்ந்த ஸ்டீவ் விட்காப் மற்றும் ஜாரெட் குஷ்னர் மற்றும் ஈரா னிய அதிகாரிகளுக்கு இடையே நேரடியாகவும், மத்தியஸ்தர்கள் வாயிலாக வும் பேச்சு நடத்தப்பட்டு வந்தது.

இப்பேச்சின் பயனாக தற்போது இரு நாடு களும் ஏற்றுக் கொள்ளும் வகையில் 14 அம்சங்கள் கொண்ட ஒரு பக்க ஒப் பந்தம் இரு தரப்பும் பரிசீலனை செய்தன.

இதைத் தொடர்ந்து ஒப்பந்தம் இறுதி செய்யப் பட்டுள்ளதாக அமெரிக்காவை தளமாக கொண்ட யார் செய்தி என்ற தனி கூறியுள்ளது.

விரைவில் இந்த ஒப்பந்தம் கையெ ழுத்தாகும் என்றும் அது கூறியுள்ளது. இரு தரப்பு ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள்: இருநாடுகளுக்கு இடை யேயான மோதல்களை அதிகாரப் பூர்வமாக முடிவுக்கு கொண்டு வருவதை இந்த

ஒப்பந்தம் உறுதி செய்யும் • ஹார்முஸ் ஜலசந்தி வழியாக பாதுகாப்பான கடல் போக்குவரத் துக்கு ஈரான் உத்தரவாதம் அளிக்கும். அதே வேளையில்,

ஈரான் துறைமுகங்கள் மீதான அமெரிக்க கடற்படையின் முற்றுகை விலக்கி கொள்ளப்படும் இது

5. யுரேனியம் செறிவூட்டலை ஈரான் நிறுத்தி வைக்க ஒப்புக் கொள்ளும். 15 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்பட வாய்ப்பு உள்ளது தற்போதைய உயர் செறி வூட்டப்பட்ட யுரேனி யம் இருப்பை அகற்று வதற்கும், செயலிழக்க செய்வதற்கும் இணக்கம் தெரிவித்துள் ளதாக கூறப்படுகிறது

ஈரான்

• ஈரான் இந்த நிபந்தனை களை பின்பற்றுவதற்கு ஏற்ப, அமெரிக்கா படிப்படியாக ஈரான் மீதான பொருளாதார தடைகளை நீக்கும்.

மேலும், முடக்கப்பட்ட ஈரானின் நிதிகளை விடுவிக்கும்.

இவ்வாறு அந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் இரு தரப்பும் கையெழுத்திட்ட பின், 30 நாட்கள் அவகாசம் வழங்கப்படும்.

இதில் இடம்பெற்றுள்ள சில முக்கிய அம்சங்கள் குறித்து ஈரானின்

கருத்தை தெரிந்து கொள்வதற்காக, அமெரிக்கா 48 மணி நேரம் கால அவகாசம் வழங்கியுள்ளது. போர் தொடங்கியதில் இருந்து இரு நாடுகளும் தீர்வு காண்பதற்காக இவ்வளவு நெருக்கமாக வந்திருப்பது இதுவே முதல்முறையாகும்.

### முதலமைச்சர் பதவியில் இருந்து விலக மம்தா மறுப்பு!

# மேற்குவங்க சட்டப்பேரவையை கலைத்தார் ஆளுநர் ஆர்.என்.ரவி!

கொல்கத்தா, மே.9-

முதலமைச்சர் பதவியிருந்து மம்தா பானர்ஜி விலக மறுத்திருந்த நிலையில், மேற்குவங்க சட்டப்பேரவை கலைக்கப்படுவதாக ஆளுநர் ஆர்.என்.ரவி அறிவித்துள்ளார்.

மேற்கு வங்க சட்டப் பேரவைத் தேர்தலில் பாஜக ஆட்சியை பிடித்தது. வாக்கு எண்ணிக்கையில் மிகப் பெரும் அளவில் முறைகேடுகள் நடைபெற்றதாக குற்றஞ்சாட்டி முதலமைச்சர் பதவியில் இருந்து விலக மாட்டேன் என மம்தா பானர்ஜி திட்டவட்டமாக கூறி வருகிறார்.

இன்று புதிய அரசு பதவியேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மம்தா பானர்ஜியின் முடிவு அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த சூழலில், மேற்குவங்க அமைச்சரவை கலைக்கப்படுவதாக ஆளுநர் ஆர்.என்.ரவி அறிவித்துள்ளார்.

இந்திய அரசியலமைப்பின் சட்டப்பிரிவின் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தி மேற்கு வங்க அமைச்சரவையை கலைப்பதாக ஆளுநர் ஆர்.என்.ரவி அறிவித்துள்ளார்.

# தி.மு.க. அரசின் போதை தடுப்பு நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவை!

### உயர்நீதி மன்ற மதுரை கிளை நீதிபதி புகழாரம்!

மதுரை, மே 9-

போதைப்பொருளை கட்டுப்படுத்த முந்தைய திமுக அரசு எடுத்த நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவை என ஐகோர்ட் மதுரைகிளைகூறியுள்ளது.

மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் போதைப் பொருள் தடுப்பு சட்டத்தின் கீழ் தண்டனை பெற்ற பலர், தங்களது தண்டனையை இடைநிறுத்தம் செய்து, ஜாமீனில் விடுவிக்கக் கோரி தனித்தனியாக ஐகோர்ட் மதுரை கிளையில் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுக்கள் அனைத்தையும் விசாரித்த நீதிபதி பி.புகழேந்தி பிறப்பித்த உத்தரவு:

கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய 3 மாவட்டங்களில் சுமார் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கஞ்சா கடத்தல் உள்ளிட்ட போதைப்பொருள் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குகள் பதிவாகியுள்ளது. தமிழ்நாட்டில் பதிவாகும் வழக்குகளில் 50 சதவீ தத்திற்கும் அதிகமான வழக்குகள் இந்த 3 மாவட்டங்களில் மட்டும் பதிவாவது கவனிக்கத்தக்கது. இவை ஒழுங்கமைக்கப்பட்ட போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பைக் காட்டுகிறது. தமிழ்நாடு அரசு போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக பூஜ்ஜிய சகிப்புத்தன்மை கொள்கையை கடைப்பிடித்து வருவதாகவும், தமிழ்நாட்டில் இருந்து போதைப் பொருட்களை ஒழிக்க அரசு உறுதியுடன் இருப்பதாகவும், போதைப் பொருள் விழிப்புணர்வு கையேடு வெளியீடு, மற்றும் போதைப் பொருட்களை அழிப்பதற்கான வழிமுறைகளை உருவாக்குவது குறித்து டிஜிபி மற்றும் உள்துறை அமைச்சகம் பல்வேறு சுற்றறிக்கைகளை வெளியிட்டுள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசின் (முந்தைய திமுக அரசு) இந்த சிறப்பான நடவடிக்கையை

நீதிமன்றம் பாராட்டுகிறது. இருந்த போதிலும் தமிழ்நாட்டில் கஞ்சா பயிரிடுவது நிறுத்தப்பட்டாலும், இங்கிருந்த குற்றவாளிகள் தற்போது ஆந்திரா, தெலங்கானா, ஒடிசா போன்ற மாநிலங்களில் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து கஞ்சா பயிரிட்டு, அங்கிருந்து தமிழ்நாட்டிற்கு கடத்தி வருவது தெரிய வந்துள்ளது.

போதைப்பொருள் ஒழிப்புக் காக உருவாக்கப்பட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவை விட, உள்ளூர் போலீசாரே போதைப் பொருள் நடமாட்டம் தொடர் பாக அதிக வழக்குகளைப் பதிவு செய்கின்றனர். போதைப்பொருள் தடுப்பு பிரிவுக்கு தமிழ்நாடு முழுவதும் 12 டிஎஸ்பிக்கள், 16 இன்ஸ்பெக்டர்கள் என மிக குறைந்த எண்ணிக்கையிலான அதிகாரிகளே உள்ளனர். எனவே, போதைப்பொருள் தடுப்பு பிரிவில் காலிப் பணியிடங்களை விரைந்து நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். போதைப்பொருள் தடுப்பு பிரிவில் சைபர் கிரைம் செல்களை உருவாக்கி, போதை பொருள் கடத்தல்காரர்களின் ஆன்லைன் தொடர்புகளைக் கண்காணிக்க வேண்டும்.

பேருந்துகள் மற்றும் ரயில்களில் அவ்வப்போது சோதனை களை நடத்த போதைப்பொருள் தடுப்பு பிரிவுக்கு தமிழ்நாடு சிறப்பு போலீஸ் படை உதவியைப் பயன்படுத்த அரசு பரிசீலிக்க வேண்டும். போதைப்பொருள் வழக்குகளில் போலீசார் கைது மற்றும் கஞ்சா பறிமுதல் செய்வதிலேயே கவனம் செலுத்துகிறார் கள், ஆனால் கஞ்சா எங்கிருந்து வருகிறது, அதன் பின்னால் உள்ள பணப்பரிவர்த்தனை வலையமைப்பு என்ன என்பது குறித்து விசாரணை நடத்தப்படுவதில்லை. எனவே, இனிவரும் அனைத்து போதை பொருள் தடுப்பு வழக்குகளிலும் குற்றவாளிகளின் சொத்துக்களைக் கண்டறிந்து பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விஏஓக்கள் மூலம் சந்தேகத்திற் குரிய நபர்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்க வேண்டும். ஆந்திரா, தெலங்கானா போன்ற மாநில அதிகாரிகளுடன் இணைந்து செயல்பட வேண்டும். வெறும் கைதுகளால் மட்டும் போதைப் பொருள் நடமாட்டத்தைத் தடுத்து விட முடியாது, கடத்தல் கும்பலின் பொருளாதார அடித்தளத்தைத் தகர்த்தால் மட்டுமே போதைப் பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்க முடியும் எனக்கூறி கடுமையான நிபந்தனைகளுடன் குற்றவாளிகளுக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார்.

### கேரளத்தில் — காங்கிரஸ் கட்சி

# முதல்வரைத் தேர்ந்தெடுக்க முடியாமல் திணறல்!

திருவனந்தபுரம்,மே.9-

கேரள சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்றது. ஆனால் தேர்தல் முடிந்து 4 நாட்கள் ஆன பிறகும் இப்போது வரை புதிய முதல்வரை தேர்வு செய்ய முடியாமல் தடுமாறி வருகிறது. பினராயி விஜயன் ஆட்சியில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சதீசன், அதற்கு முந்தைய பினராயி விஜயன் ஆட்சியில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த மூத்த தலைவர் ரமேஷ் சென்னித்தலா, ஆலப்புழா தொகுதி எம்பியான கே.சி. வேணு கோபால் ஆகிய 3 பேரும் தான் முதல்வர் பதவிக்கு மல்லுக்கட்டி வருகின்றனர்.

முதல்வரை தேர்வு செய்வதற்காக காங்கிரஸ் மேலிட தலைவர்கள் திருவனந்தபுரத்தில் முகா மிட்டுள்ளனர். இவர்கள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் எம்எல்ஏக்களுடனும், முக்கிய தலைவர்களுடனும் ஆலோசனை நடத்தினர்.

முதல்வர் பதவிக்கு போட்டியிடும் கே.சி. வேணுகோபால், சதீசன் மற்றும் ரமேஷ் சென்னித்தலா விடமும் மேலிடக் குழு ஆலோசனை நடத்தியது. இவர்களிடம் ஆலோசனை நடத்திய பின்னர் மாநிலத் தலைவர் சன்னி ஜோசப்பையும் மேலிடக் குழு சந்தித்து பேசியது. தேர்தல் முடிவு வந்து 4 நாட்கள் ஆகியும் இதுவரை முதல்வரை தேர்வு செய்ய முடியாத அளவுக்கு காங்கிரசில் கடும் குழப்பம் நிலவி வருகிறது.

இதனிடையே, மக்கள் வழங்கிய தீர்ப்பை தலை வணங்கி ஏற்றுக் கொள்வதாக கேரள முன்னாள் முதலமைச்சர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார். தொடர்ந்து மூன்றாவது முறையாக எதிர்பார்க்கப்பட்ட வெற்றியை இழந்திருந்தாலும் ஒரு பெரும் பகுதியினர் இடது ஜனநாயக முன்னணியுடன் உறுதியாக நின்றது மிகுந்த நம்பிக்கையை தந்திருப்பதாக கூறியுள்ளார்.

இடது ஜனநாயக முன்னணியை பொறுத்தவரை இது ஒரு முடிவு அல்ல. மாறாக தொடர்ச்சியான ஒரு அரசியல் பணிகளுக்கான ஒரு தொடக்கமாகும் என்றும் மக்களின் நம்பிக்கையை சிறந்த முறையில் மீண்டும் பெறுவதற்கும், மேலும் தவறுகளை திருத்தி வலுவாக முன்னேறுவதற்கும் உறுதியுடன் இருப்பதாகவும் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

### தென்கொரியாவுடன் இணையும் எண்ணமில்லை!

# அரசமைப்புச் சட்டத்தைத் திருத்திய வடகொரியா!

பியாங்யாங், மே. 9-

தென்கொரியாவுடன் இனி எக்காலத்திலும் இணையப் போவதில்லை என்ற கொள்கையை உறுதிப்படுத்தும் வகையில், வடகொரியா தனது அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.

கொரிய தீபகற்பத்தின் அங்கமான இவ்விரு நாடுகளும் தனித்தனி இறையாண்மை கொண்ட தேசங்கள் என்றும், தென்கொரியா தனது நாட்டின் 'முதன்மை எதிரி' என்றும் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் அறிவித்திருந்த நிலையில், தற்போது அது சட்டப்பூர்வமாக அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. வடகொரிய நாடாளுமன்றமும் இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருத்தப்பட்ட அரசமைப்புச் சட்டத்தின்படி, வடகொரியாவின் நிலப்பரப்பு என்பது வடக்கே சீனா மற்றும் ரஷ்யாவையும், தெற்கே தென்கொரியாவையும் எல்லையாகக் கொண்டது என வரையறுக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக, கொரிய தீபகற்பம் முழுவதும் ஒரே தேசமாகக் கருதப்பட்டு வந்த நிலையில், முதல்முறையாக தனது தெற்கு எல்லையை வடகொரியா தனித்து அடையாளப்படுத்தி யுள்ளது.

இருப்பினும் கடல்சார் எல்லைகளில் நிலவும் சிக்கல்கள் காரணமாக, ஜப்பான்கொரிய தீபகற்பம் இடையிலான மஞ்சள் கடல் பகுதியில் உள்ள சர்ச்சைக்குரிய எல்லைக் கோடுகள் குறித்து இதில் தெளிவான விளக்கம் ஏதும் அளிக்கப்படவில்லை.

இந்த அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் கிம் ஜோங் உன்னின் அதிகாரமும் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. இனி அவரின் பதவி 'நாட்டின் தலைவர்' (ஹெட் ஆஃப் ஸ்டேட்) என மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம், பன்னாட்டு அளவில் வடகொரியாவின் அதிகாரப்பூர்வ பிரதிநிதியாக அவர் அங்கீகரிக்கப்படுகிறார்.

பாதுகாப்பு தொடர்பான பிரிவில், வடகொரியா ஒரு 'பொறுப்புள்ள அணு ஆயுத நாடு' என்று விவரிக்கப்பட்டுள்ளது. நாட்டின் மக்களையும், வளர்ச்சி உரிமைகளையும் பாதுகாக்கவும், போரைத் தடுத்து பிராந்திய மற்றும் உலகளாவிய அமைதியை நிலைநாட்டவும் அணு ஆயுத மேம்பாடு தொடரும் எனக் கூறப்பட்டுள்ளது.

மேலும், நாட்டின் ஒட்டு மொத்த அணு ஆயுதப் படைகளையும் வழிநடத்தும் அதிகாரம் கிம் ஜோங் உன் வசம் மட்டுமே இருக்கும் என்பதும் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது.

### உலகளாவிய எரிசக்தி நெருக்கடியை எதிர்கொள்ள முடிவு!

# 'ஆசியான்' அமைப்பின் உச்சி மாநாடு தொடங்கியது!

செபு, மே. 9-

உலகளாவிய எரிசக்தி நெருக்கடியை எதிர் கொள்ள உறுப்பு நாடுகள்

ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன், 'ஆசியான்' எனப்படும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பான ஆசியான் அமைப்பின் உச்சி மாநாடு தொடங்கி உள்ளது.

நடப்பாண்டுக்கான 48வது ஆசியான் உச்சி மாநாடு பிலிப்பைன்ஸ் நாட்டின் செபு மாகாணத்தில் நேற்று முன்தினம் துவங்கியது. இரண்டு நாள் நடைபெறும் இம்மாநாட்டிற்கு பிலிப்பைன்ஸ் பெர்டினான்ட் அதிபர் மார்கோஸ் ஜூனியர் தலைமை தாங்குகிறார்.

முக்கிய கூட்டங்கள் லாபு லாபு நகரம் மற்றும் செபு சிட்டி உள்ளிட்ட பகுதிகளில் நடக்கிறது. ஈரான் போரினால் எரிசக்தி வினியோகத்தில் மிக மோசமாக பாதிக்கப் பட்ட பிராந்தியங்களில் ஆசியானும் ஒன்று. இக்கூட்டமைப் பில் உறுப்பினர்களாக உள்ள 11 நாடுகளில் 70 கோடி மக்கள் வசித்து வருகின்றனர்.

போரால் ஹார்முஸ் ஜலசந்தி முடக் கப்பட்டதையடுத்து, எரி சக்தி மற்றும் உணவு பாது காப்பு குறித்த கவலைகள் இந்த அமைப்பை பெரிதும் வாட்டுகின்றன.

ஆசியான் நெருக்கடி காலங்களில் நாடுகள் தங்களுக்குள்ளான ஒருங்கிணைப்பை வலுப்படுத்த வேண்டும் என பிலிப்பைன்ஸ் வெளியுறவு அமைச்சர் தெரசா லாசரோ வலியுறுத்தினார்.

மாநாட்டு தீர்மானத்தில், அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே நல்லெண்ண அடிப்படை யில் பேச்சு நடத்தப்பட வேண்டும் என்றும், ஹார்முஸ் ஜலசந்தியை மீண் டும் திறக்க வேண்டும் என்றும் ஆசியான் தலை வர்கள் வலியுறுத்த உள்ள தாக கூறப்படுகிறது.

இந்த உச்சி மாநாடு பிராந்தியத்தின் பொருளாதார ஸ்திரத் தன்மையை பாதுகாப்பதிலும், குறிப்பாக எரிபொருள் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் ஒரு முக்கிய மைல்கல்லாக கருதப் படுகிறது.